Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 359

திங்கட்கிழமை 20 நவம்பர் 2023

கார்த்திகை 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## சீனிக்குத் தட்டுப்பாடில்லை; விலை அதிகரிப்புமில்லை

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, நவ. 20
வரி அதிகரிப்புக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட 19 ஆயிரம் மெற்றிக் தொன் சீனி தற்போதும் நாட்டில் இருக்கின்றது. அதனால் »11

## பட்ஜெட் 2ஆம் வாசிப்பு நாளை நாடாளுமன்றில்!

கொழும்பு, நவ. 20
2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு நாளை மாலை 6 மணிக்கு நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. நாளையதினம் »11

## அரிசி, சீனிக்கு நாட்டில் தட்டுப்பாடு

**கொழும்பு, நவம்பர் 20**

**அரிசி மற்றும் சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்யும் அரசாங்கத்தின் முயற்சியால் தற்போது சந்தையில் சீனி, சம்பா அரிசி என்பவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் சந்தைக்கு சீனி, அரிசி வாங்க வந்த வாடிக்கையாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.** »11

## இந்தியாவின் அழுத்தம் அடிபணிந்தது இலங்கை

### கைதான சூட்டோடு விடுவிக்கப்பட்ட மீனவர்கள்

யாழ்ப்பாணம், நவ. 20
பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்ட 22 தமிழக மீனவர்கள் இந்திய அரசின் அழுத்தத்தை »11

## எரிபொருள் விற்பனை: அமெரிக்காவும் கால்பதிக்கிறது

கொழும்பு, நவ. 20
மூன்றாவது வெளிநாட்டு எரிபொருள் விற்பனை நிறுவனமாக அமெரிக்காவின் ஆர்.எம்.பார்க்ஸ் நிறுவனம் அடுத்த மாதம் முதல் எரிபொருள் விற்பனையை ஆரம்பிக்கவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரி »11

## வழிப்பறிக்கு முயன்ற முகமூடிக்கொள்ளையர்கள்

யாழ்ப்பாணம், நவ. 20
சுழிபுரத்தில் நேற்றுமுன்தினம் இரவு வீதியில் நடந்து சென்ற பெண்ணிடம் வழிப்பறிக்கு முயன்ற இரு முகமூடிக் கொள்ளையர்கள் »11

கொக்குத்தொடுவாய்

## புதைகுழி அகழ்வு

### மீள ஆரம்பம்

முல்லை., நவ. 20
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு இன்று காலை 8 மணிக்கு மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா உதயனுக்குத் தெரிவித்தார். (அ-ஒ-125)



விரிவு பக். - 04

## மண்கௌவியது இந்தியா மகுடம்சூடியது ஆஸி.

## உணவகத்தில் தகராறு: தள்ளியதில் வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 20
பலாலி வீதியில் உரும்பிராய் தெற்கிலுள்ள உணவகத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கைகலப்பில் அங்கு பணியாற்றும் சுப்பிரமணியம் பிறேமராசன் (வயது - 66) உயிரிழந்துள்ளார். »11

## சிறையில் சந்தேகநபர் நேற்றுத் திடீர் சாவு!!!

### வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதை; முறையிடப்பட்ட நிலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 20
வட்டுக்கோட்டை பொலிஸாரால் திருட்டு வழக்கில் சந்தேகநபராகக் கைது செய்யப்பட்ட ஒருவர் நீதிமன்றினூடாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை திடீரென உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உறவினர்களால் வட்டுக் »11

## சிறையில் இளைஞன் சாவு! விசாரணைக்குழு நியமனம்

யாழ். மாவட்ட மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

விரிவு:- பக்.11

## பலஸ்தீன விடுதலைக்காக உலகக்கிண்ணத்தில் போர்

விரிவு:- பக்.04

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்காகவே போராட்டம் நிதியைப் பெறுவதற்கல்ல!

## கலையரசன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.20

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியவும், நீதிக்காகவுமே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராடிவருகின்றனர். தேவைப்படுவது நிதி அல்ல விசாரணை யாகும்.**

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றே ஜனாதிபதியிடம் நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். எமக்கு நீதிவேண்டுமே தவிர, சலுகைகளைக் கோரவில்லை. போர் முடிவடைந்து 14 ஆண்டுகள் கடந்துள்ளன.

ஆனால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனக் கோரியும், நீதிக்காகவும் உறவுகள் போராடிவருகின்றனர். அவர்களுக்கு விலை பேசாமல், அவர்களின்கோரிக்கை என்ன என்பதை ஆட்சியாளர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

நாங்கள் வந்தேறு குடிகள் அல்லர். இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கு உள்ள உரிமைகள் எமக்கும் இருக்கின்றன - என்றார். (ஏ-44)

# நடிகர் ஏரம்பு உயிரிழந்தார்!



யாழ்ப்பாணம், நவ. 20

விடுதலைப் புலிகளின் காலத்தில் மேடையேற்றப்பட்ட இன உணர்வு நாடகங்கள் மற்றும் திரைப் படங்கள் போன்றவற்றில் தனது கலைப் பங்களிப்பினை வழங்கிய மாணிக்கம் ஏரம்பு (வயது - 81) நேற்றுமுன்தினம் அதிகாலைவேளை வட்டுக்கோட்டை துணவிப் பகுதியிலுள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

1942ஆம் ஆண்டு பிறந்த இவர் சிறுவயது தொடக்கம் நடிப்பில் ஆர்வம் கொண்டு பல கதாபாத்திரங்களில் நடித்து வந்தார். புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும்கூட கூத்துக்கள் மற்றும் நாடகங்களில் தனது பங்களிப்பை நல்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-27,125)

# கிழக்கு ஆளுநராக மீண்டும் அஹமட்?

கொழும்பு, நவ.20

கிழக்கு மாகாண ஆளுநராகப் பதவி வகித்து வரும் செந்தில் தொண்டமானை அந்தப் பதவியில் இருந்து நீக்கி, அண்மையில் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட்டுக்கு பதவியை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று சிங்கள வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாகாண ஆளுநர்கள் பலரை இடமாற்றம் செய்ய ரணில் அரசு திட்டமிட்டுள்ளது எனச் செய்தி கிடைத்துள்ளது.

அண்மையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட்டுக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் பதவி வழங்கப்படவுள்ளது என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவி வகிக்கும் செந்தில் தொண்டமான் ஊவா மாகாண ஆளுநராகவும், தற்போதைய ஊவா மாகாண ஆளுநரான ஏ.ஜே.எம். முஸம்மில் மேல் மாகாண ஆளுநர் பதவிக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

தற்போது மேல் மாகாண ஆளுநராகப் பதவி வகிக்கும் முன்னாள் விமானப் படைத்தளபதி ரொஷான் குணதிலக்கவுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி கிடைக்க வாய்ப்புள்ளது என அறியமுடிகின்றது.

இந்த நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# வீதிகளில் நின்று சத்தமிடாது நீதிமன்று சென்று கூறுங்கள்!

## ராஜபக்சக்களுக்குத் தலதா அத்துக்கோரல அறிவுரை

கொழும்பு, நவ.20

போர் வெற்றியை முன்னிலைப் படுத்திக்கொண்டு ராஜபக்சவினர் நாட்டில் முன்னெடுத்த விடயங்கள் நீதிமன்ற தீர்ப்பின்மூலம் தற்போது அம்பலமாகியுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் அதை வீதியில் சொல்லிக்கொண்டிருக்காமல் நீதிமன்றத்துக்குச் சென்று கூறவேண்டும்- இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். தற்போது இந்தத் தீர்ப்புத் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தெரிவுக்குழு அமைத்து நாட்டில் நீதித்துறையின் உயர்பதவியில் கைவைத்த வரலாறு இந்த நாடாளுமன்றத்துக்கு இருக்கிறது.

அன்று பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குக் கொண்டுவந்து அவருக்கு எதிராகக் குற்றப்பிரேரணை சமர்ப்பித்து அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கிய வரலாற்றை மறக்கமுடியாது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இணங்க முடியாது என்றால், அதுதொடர்பில் கீழ் மட்டத்தில் இருந்து கதைத்துக்கொண்டிருக்காமல் நீதிமன்றத்துக்குச் சென்று அதைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ஏ-இ)

# பொருளாதாரத்தை சிதைத்தோரை அடையாளம் காட்டியது நீதித்துறை

## நன்றி கூறுகின்றார் மைத்திரி

கொழும்பு, நவ.20

பொருளாதாரப் பாதிப்புக்கு எவர் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்தியுள்ளது. நீதிமன்றத்துக்கு எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். தீர்ப்பு வழங்கிய நீதியரசர்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அழைத்து விசாரணை செய்ய எவருக்கும் தகைமையில்லை.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தோல்வியடைந்துள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு எவர் காரணம் என்று இதுவரைகாலமும் பேசப்பட்ட விடயத்துக்கு உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பைத் தற்போது வழங்கியுள்ளது.

நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தும் தகைமை இங்கு எவருக்கும் கிடையாது. நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்துக்கொண்டிருக்காமல் உரிய தரப்பினர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்- என்றார். (ஏ-இ)

# நீதிமன்றத் தீர்ப்பை வைத்து பொறுப்பாளி ஆக்கமுடியாது

## ராஜபக்சக்களுக்கு முட்டுக்கொடுக்கும் பிரசன்ன

கொழும்பு, நவ.20

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கொண்டு பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்சக்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட முடியாது. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைக் கொண்டே நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

-இவ்வாறு ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- வரையறுக்கப்பட்ட நிலைக்கு அப்பாற்பட்டு நீதிமன்றம் செல்லவில்லை. அதனால்தான் பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் ஆராய தெரிவுக்குழுவைக் கோருகிறோம்.

பொருளாதாரப் பாதிப்புக்கு எவர் காரணம் என்று எதிர்க்கட்சியினர் அரசியல் பரப்புரை செய்கிறார்கள். உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளதீர்ப்பைத்தவறாகச்சித்திரிக்கிறார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு எவர் காரணம் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. அதனால் பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் ஆராய தெரிவுக்குழு பயனற்றது. குழுவை நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொருளாதாரப் பாதிப்புக்கான காரணிகள் நீதிமன்றத்தில் முழுமையாக ஆராயப்பட்டதா? என்பது கேள்விக்குறியாகவுள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு மக்கள் விடுதலை முன்னணியினர் கருத்துத் தெரிவிக்கிறார்கள். சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களுடனும் இதனுடன் தொடர்புகொண்டுள்ளன -என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதம் மீதான அவதூறு ஏற்கமுடியாத ஒன்றே!

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ. 20**

**பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பரத நடனக் கற்கைநெறியை இன்னொரு மதக் குழு அல்லது இனக் குழுவைச் சேர்ந்த ஒரு மத குரு மிகக்கேவலமான வார்த்தையைப் பயன்படுத்தி இழிவுபடுத்தியுள்ளார். எவராகவிருந்தாலும் இது மிகவும் கண்டிக்கத்தக்கவிடயம் என்று தெரிவித்துள்ளார் யாழ். மாவட்டச் செயலரான அம்பலவாணர் சிவபாலசுந்தரன்.**

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா உடுவில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய பண்பாடு, கலாசாரம் என்பன இன்று திட்டமிட்டுச் சிதைக்கப்படுகின்றது, சிதைப்பதற்குத் தூண்டப்படுகின்றது. இதற்கு உதாரணமாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது. இதனை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. இதற்கு எதிராக எங்கள் கண்டனங்களை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

பரத நாட்டியம் எங்கள் பாரம்பரியம். இந்தக் கற்கை நெறியை நாம் பட்டச் சான்றிதழுக்குரிய பயிற்சி நெறியாகப் பயின்று கொண்டிருக்கின்றோம்.

தற்காலத்தில் சர்வதேசரீதியாகவும், தேசியரீதியாகவும் எங்கள் பண்பாட்டுக்கு இடைஞ்சல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் எங்கள் பண்பாட்டைப் பேணுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். எங்களை நாங்கள் அர்ப்பணிப்பதற்கு உறுதியாக இருக்கவேண்டும் - என்றார். (ம-66)

# மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்குப் பிணை!

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியிலுள்ள பாடசாலையில் மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஆசியரொருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தரம் 9இல் கல்வி கற்கும் மாணவரொருவர் பாடசாலைக்குச் சமுகமளிக்காத நிலையில், அவர் ஆசிரியரால் தண்டிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-27)

# இலங்கை வந்துள்ள சீனக் குழு

கொழும்பு, நவ.20

சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் மூன்று நாள்களுக்கு இலங்கையில் தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் அரச உயர்மட்ட அதிகாரிகளுடன் தூதுக்குழு பேச்சை நடத்தவுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மாலைதீவு ஜனாதிபதியின் பதவிப்பிரமாண நிகழ்வில் கலந்துகொண்ட சீனப் பிரதிநிதிகள், அதன்பின்னர் இலங்கைக்கு வந்துள்ளனர். (எ-இ)

# போராட்டத்தைத் தீவிரமாக்கும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்

கொழும்பு, நவ.20

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து விலகுவோம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ரொஷான் குமார இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

சுகாதார அமைச்சுக்குப் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு ஒருவாரம் கடந்துள்ளபோதும் இதுவரை பதில் கிடைக்கவில்லை.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் இருந்து விலகி ஒருவாரத்துக்கும் மேலாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் தொற்று நோய் ஒழிப்பு நடவடிக்கையில் இருந்தும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விலகுவர் - என்றார். (எ-இ)

# புதினம் தெரியுமோ?

**'காசைக் குடுத்தால் மதிப்பு, சீசனைக் காட்டினால் கொதிப்பு' எண்டு நடக்கிற ஒரு 'சீரிபி' பஸ் கொண்டெக்டரால பளையில இருந்து யாழ்ப்பாணம் வாற கனபேர் அவதிப்படுகினம்.**

**கண்டி டிப்போவுக்குச் சொந்தமான அந்த பஸ் (பஸ் நம்பர் WPNC 2226) பள்ளிக்கூடம் விடுகிற நேரத்துக்குத்தான் பளைக்கு வரும். சீசன் ரிக்கெற் எடுத்து பஸ்ஸில போய் வாற ரீச்சர்மார், பள்ளிக்கூடப் பிள்ளையள் எல்லாரும் இந்த பஸ்ஸில ஏறினால் மினக்கெடமால் வீட்டை போகலாம். அதுக்குப் பிறகு அரைமணித்தியாலம் நிண்டால்தான் வேற பஸ் வரும். அதால என்னதான் பஸ் நிறைய சனம் இருந்தாலும், நெருக்குப்பட்டு நிண்டாவது போய்ச்சேருவம் எண்டு எல்லாரும் அடிச்சுப் பிடிச்சு ஏறுவினம். ஆனால் அப்பிடி பஸ்ஸை ஆக்கள் நிக்கிற இடத்தில ஒருநாளைக்கு நிப்பாட்டுறதும், இன்னொருநாள் நிக்காமல் ஓடுறதும் அந்த பஸ்ஸுக்கு வாடிக்கையாப் போட்டுது. அப்பிடி ஏதோ நல்லகுணம் வந்து பஸ்ஸை நிப்பாட்டினாலும், காசைக் குடுத்து ரிக்கெற் வாங்கிறவையிட்ட நல்லமாதிரி கதைக்கிற கொண்டெக்டர், சீசனைக் காட்டுற ரீச்சர்மார், பிள்ளையளோட பாய்ஞ்சு விழுவாராம். சீசன் ரிக்கெற்றையும் ஏதோ சண்டைக்காரன் மாதிரி முறைச்சுக்கொண்டு இழுத்துப் பறிச்சுத்தான் பார்ப்பாராம். பளையில இருந்து யாழ்ப்பாணத்துக்கு ரிக்கெற் காசு 189 ரூபா. எல்லாரும் கூடுதலா இருநூறு ரூபாவைத்தான் குடுப்பினம். அதை வாங்கிக்கொண்டு மிச்சக்காசு 11 ரூபாவை அந்தக் கொண்டெக்டர் குடுக்கவே மாட்டாராம். இப்பிடி மிச்சக்காசு வருமானத்துக்குத்தான் தங்களோட அந்தக் கொண்டெக்டர் எரிஞ்சு விழுகிறார்போல எண்டு சீசன் ரிக்கெற்காரர் கவலைப்படுகினம்.**

**அந்த சீசன் ரிக்கெற்றில எந்தெந்த பஸ்ஸில போகலாம் எண்டு குறிச்சிருக்கிற இடத்தில, இந்தக் கண்டி பஸ்ஸும் இருக்கு. அப்பிடியெண்டால் கட்டாயம் அந்த பஸ் சீசனோட நிக்கிறவையை ஏத்திக்கொண்டு வரத்தான் வேணும். ஆனால் சீசனை ஒரு துரும்புக்குக்கூட மதிக்காமல், தாங்கள் நினைச்ச நேரம் ஆக்களை ஏத்திறது இல்லாட்டி அப்பிடியே ஏத்தாமல் பஸ்ஸை ஸ்பீட்டா ஓடுறது எண்டு அந்த பஸ்காரர் படுத்துறபாட்டைப் பாக்க பத்தியெரியுது. ஏதோ தங்கட வீட்டு பஸ்ஸை ஓடுறவை மாதிரி இப்பிடிச் சனத்தை மதிக்காமல், சீசன்காரரை மனஉளைச்சலுக்கு உள்ளாக்கிற அந்த பஸ்ஸின்ர கொண்டெக்டர், றைவருக்கு எதிரா உரியவை நடவடிக்கை ஏதும் எடுப்பினமோ? இல்லாட்டி அவையும் சீசன்காரர் சீரழியட்டும் எண்டு பேசாமல் இருக்கப் போகினமோ?**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்கௌவியது இந்தியா மகுடம் சூடியது ஆஸி.

உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய அணியை அதன் சொந்த மண்ணில்வைத்து வீழ்த்தி கிண்ணம் வென்றது அவுஸ்திரேலியா.

குஜராத்தின் அஹமதாபாத் மைதானத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருக்கையில் ஆரம்பமானது ஆட்டம். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் பட் கம்மின்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெறும் அணிகள் முதலில் துடுப்பெடுத்தாட விரும்பும் ஆடுகளத்தில் அவர் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது பலரையும் ஆச்சரியப்படுத்தியது. அவுஸ்திரேலிய வர்ணனையாளர்கள்கூட 'அதிசயிக்கத்தக்க துணிச்சலான முடிவு' என்று கம்மின்ஸின் முடிவை மெச்சினார்கள். பனிப்பொழிவு அதிகரித்துள்ளமையால் இரவுப் பொழுதில் பந்துவீசுவது சிரமமாகும் என்பதால் கம்மின்ஸ் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்று கருதப்பட்டது.

**இந்தியாவின் இன்னிங்ஸ்**

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ரோகித் சர்மா வழக்கம்போல் நல்லதொரு ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தார். வழக்கம்போல் கிடுகிடு வேகத்தில் இந்திய அணியின் ஓட்டங்கள் எகிறின. ஆனால், மிகவும் இலகுவாக எதிர்கொள்ள வேண்டிய பந்தை நேராகப் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் கில். கில்லின் ஆட்டமிழப்பையும் கருத்தில்கொள்ளாமல் அடித்தாடினார் ரோகித். மக்ஸ்வெலின் ஓவரில் ரோகித் அவசரம் காட்டினார். பவுண்டரி, சிக்சர் எனப் பறக்கவிட்ட பின்னரும் பேராசைப்பட்டு முன்னேறி விளாச பந்து மேலெழும்பியது. பவிலியன் திரும்பினார் ரோகித். அப்போதும் இந்திய அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றுப் பலமாகவே இருந்தது. ஆனால், வந்த வேகத்தில் பவிலியன் திரும்பி சரிவை ஆரம்பித்து வைத்தார் ஸ்ரேயஸ். இந்திய அணிக்கு பதற்றம் இங்கேதான் ஆரம்பித்தது. அதன் பின்னர் ராகுல், கோலி இருவரும் இணைந்து அதீத நிதானம் காட்டினார்கள். 88 பந்துகளை பவுண்டரிகள் இல்லாமல் இருவரும் எதிர்கொண்டனர். துடுப்பைத் தூக்கி விளையாடவே அச்சம் கொண்டனர். ஆனால், இந்த இணைப்பாட்டம் இந்திய அணியைப் பகுதியளவில் மீட்டது என்பது உண்மை. 54 ஓட்டங்களுடன் கோலி ஆட்டமிழந்தார். ராகுல் 66 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப இந்திய அணி 240 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

பந்துவீச்சில் ஸ்ராக் 3 விக்கெட்களையும், ஹேசில்வூட், கம்மின்ஸ் இருவரும் தலா 2 விக்கெட்களையும், மக்ஸ்வெல், சாம்பா இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

**ஆஸியின் இன்னிங்ஸ்**

அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் ஹெட் இருவரும் களமிறங்கினார்கள். 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வோர்ணர். மார்ஷ் 15, சிமித் 4 என சொற்ப ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க ஒரு கட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்களை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன் பின்னர்தான் அவுஸ்திரேலிய வீரர்கள் தாங்கள் ஏன் உலகச் சம்பியன்கள் என்பதை உணர்த்தினார்கள். ஹெட்டை காப்பாற்றுவதற்காக அதிகளவான பந்துகளை எதிர்கொண்டு டெஸ்ட் ஆட்டமொன்றை ஆடிக்காட்டினார் லபுஷேன். 'இதுவே உன் கடமை' என அவருக்கு 'உத்தரவிட்டு' அனுப்பப்பட்டது போன்று இருந்தது லபுஷேனின் தற்காப்பு ஆட்டம். சிமித் ஆட்டமிழந்த பின்னர் அடுத்த 18 பந்துகளில் 'அவசரக் குடுக்கையான' ஹெட் எதிர்கொண்டது வெறும் இரண்டே பந்துகள்தான். லபுஷேனின் இந்தத் திட்டம் இந்திய அணிக்கு சடுதியாகக் கிடைத்த பொறியை இல்லாமலாக்கியது. பிறிதொரு விக்கெட்டை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது ஆஸி. இணைப்பாட்டம் வலுப்பெற்றது. ரோகித் சர்மா ஒரு தலைவராக எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டு பார்த்தார். ஆயினும் எந்தப் பயனும் இல்லை. அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக அரைச்சதம் கடந்து ஆஸியை இறுதிக்குள் அழைத்துவந்த ஹெட், இறுதியாட்டத்தில் சதம் கடந்தார். 'பெரிய ஆட்டங்களின் நாயகன்' இதுவே அவுஸ்திரேலிய அணியினர் ஹெட்டுக்கு வைத்திருக்கும் செல்லப் பெயர். இதன் தாற்பரியத்தை அவர் நேற்று உணர்த்தினார். வெற்றிக்கு இரண்டே ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், சிக்சர் அடிக்க முயன்று ஆட்டமிழந்தார் ஹெட். ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் மக்ஸ்வெல். லபுஷேன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களைப் பெற்றார். (ம)



உலகக் கிண்ணத் தொடரில் தொடராட்ட நாயகனாக இந்திய அணியின் நட்சத்திர வீரர் கோலி தெரிவு செய்யப்பட்டார். அவர் 765 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இதில் 3 சதங்களும் 6 அரைச் சதங்களும் உள்ளடங்குகின்றன.



## பலஸ்தீன விடுதலைக்காக உலகக்கிண்ணத்தில் போர்

உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தின்போது, சுதந்திர பலஸ்தீன விடுதலையையும், இஸ்ரேலின் இனப்படுகொலைகளைக் கண்டித்தும் ரசிகரொருவர் மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்து அங்குமிங்கும் ஓடித்திரிந்து போராட்டத்தில் ஈடுபட்டார். அவுஸ்திரேலிய அணியின் துணைப்பிரதமர், இந்தியப் பிரதமர் மோடி, ஆளும் பா.ஜ.க.வின் தலைவர் அமித் ஷா உள்ளிட்ட உலகப் பிரபலங்கள் பலரும் திரண்டிருக்கையில் அந்த ரசிகர் மேற்கொண்ட இந்தப் போராட்டம் பலரின் கவனத்தையும் சமூக வலைத்தளங்களில் பெற்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டெங்கு அவதானம்!

வடக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலும் டெங்கின் தாக்கம் மிகத்தீவிர மாகியிருக்கின்றது. யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மட்டுமல்ல, வடக்கின் அநேக மாவட்ட மருத்துவ மனைகள், பிரதேச மருத்துவமனைகள் என்பவற்றில் இருந்து கிடைக்கப்பெறும் டெங்குத் தொற்றுத் தொடர்பான தரவுகள் ஆரோக்கியமானவை அல்ல. இந்த மாரிகாலம் வழக்கமான மழைக்காலங் களைவிடவும் ஆபத்தானது என்ற செய்தியைத்தான் அந்தத் தரவுகள் கட்டியம் செய்கின்றன. எல்லாவற் றையும்விட, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டெங்குக் களப்பணியாளர்கள் தற்போது பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டிருக்கும் நிலையில், டெங்குத் தொற்று அடுத்தசில நாள்களில் அல்லது வாரங்களில் தீவிரமாகக்கூடிய ஏதுநிலையும் உண்டாகியிருக்கிறது.

டெங்கு, வைரஸ் காய்ச்சல் என்பன காரண மாக அன்றாடம் பல நூற்றுக்கணக்கானவர்கள் வடக் கிலுள்ள பல மருத்துவமனைகளையும் நாடிக் கொண் டிருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரச் சிதிலம் மருத்துவத்துறையை பெரும் சவாலுக்குள் தள்ளியுள் ளது. மருந்துகள், மருத்துவ உபகரணங்களுக்குத் தட்டுப்பாடென்பது கடந்த சில வாரங்களாகவே எழுதப்படாத விதியாகிவிட்ட நிலையில் இந்த மருத் துவ நெருக்கடி மற்றொரு கோணத்தில் வியாபிக்க வாய்ப்பிருப்பதைத்தான் டெங்குத் தொற்றுத் தொடர் பான மாவட்ட – மாகாண – தேசியத் தரவுகளும் பறைசாற்றுகின்றன.

வெம்மையின் பூமியான வடக்கு – கிழக் கில் இந்த மாரிகாலம் மட்டுமே ஒருவரம். இதமான காலநிலை, பெரும்போக நெற்செய்கை, நிலத்தடி நீருக்கான சேகரம் என்பனவெல்லாம் இந்த மாரி மழை மூலம் கிடைப்பதாலேயே, எஞ்சிய மாதங் களில் வடக்கு – கிழக்குப் பகுதிகள் உயிர்பிழைக்க முடிகின்றது. இந்த மாரிமழை இல்லாவிட்டால் தமிழர் தாயகம் பாலைவனமாகியிருக்கும். இப்படி வரமாக வாய்த்த மழைக்காலம் இப்போது டெங்கு முதலிய நோய்களால் ஆபத்தானதாக மாறியிருக் கிறது. யாழ்ப்பாணத்தில் நிலவும் மக்கள் நெருக்கம், சுகாதாரமற்ற பொதுச்சூழல், மாறிப்போன உணவு முறைகள், பெருகிவரும் நோய்கள், அனைவரின் உடலிலும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்துவரும் நிலை, மக்கள் நெருக்கத்தால் மாசுபடும் சுற்றுச்சூழல், தேங்கிநிற்கும் தண்ணீர் போன்றவற்றால் மழைக் காலம் என்றாலே ஒருவித எரிச்சல் தோன்றிவிடு கிறது. மழை என்றாலேயே அச்சமும் பதற்றமும் சூழும் அளவுக்கு எங்களின் வாழ்க்கை மாறிப்போய் விட்டது. இதன் பிரதிபலிப்பே இன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் மாவட்ட மற்றும் பிரதேச மருத்துவமனைகளிலும் எதிரொலிக்கின்றது.

கொரோனா என்பது எவ்வளவு பாரதூரமான உயிர்கொல்லி நோயோ, அதற்கு இம்மியும் குறைந்த தல்ல டெங்குக்காய்ச்சல். ஆதலால், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகம் கொண்டிராதவர்கள் பொதுவெளிகளில் அதி கம் நடமாடுவதைத் தவிர்ப்பதோடு, டெங்கு பரவும் ஏதுநிலைகளையும் இல்லாதாக்கவேண்டும். பலவித நோய்களுடன் பலநூறு நோயாளர்கள் மருத்துவமனை வளாகத்துக்குள் தினம்தினம் சென்று திரும்புகின்றனர். பல்வேறு சூழலியல்களுடன் அவர்கள் தொடர்புறு கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் மருத் துவமனையின் வளாகத்துக்குள் சிறுவர்கள், குழந்தை களை தேவையற்றவிதமாக அழைத்துச் செல்வதை முற்றாகத் தவிர்த்தல் நலம். உங்கள் ஆரோக்கியத் துக்கு மட்டுமல்ல உங்களின் குடும்பத்தின் ஆரோக் கியத்துக்கும், உங்களின் சமூகம்சார் ஆரோக்கியத்துக் கும் நீங்களே பொறுப்பாளிகள். சுற்றுப்புறச் சூழல் துப்புரவுமுதல் அன்றாடக் கடமைத்தளங்கள் வரை யில் அனைத்திலும் பொறுப்புணர்வதே இன்றைய காலத்தேவை.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள். "

– மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)




# கலைஞர்களின் இறக்குமதிக் கலாசாரம் சுதேசக் கலைஞர்களை மலினப்படுத்தும்

## சிறீதரன் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, நவ. 20

**கலைத்துவப் பாரம்பரியமும் அடையாளமும் மிக்க எங்கள் மண்ணின் கலைஞர்களைப் புறக்கணித்து, தென்னிந்தியக் கலைஞர்களை முன்னிலைப்படுத்தும் 'இறக்குமதிக் கலாசாரம்' யாழ்ப்பாணத்தில் முகிழ்ப்புப் பெற்றுள்ளமை இந்த மண்ணின் சுதேசியக் கலைஞர்களையும், இளைய தலை முறைத் திறமையாளர்களையும் மலினப்படுத் துவதாகவே உள்ளது - என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரன்.**

கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனவிடுதலைப் போரையும், ஈழத்தமிழர்களது தேசிய இயக்கத்தையும் கொச்சைப்படுத்தியோரையும், இன அழிப்புப்போரில் எமது மக்கள் கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்படும்போது, எந்தச் சலனமுமற்று தமது தனிமனித வளர்ச்சிக்காக அயராது உழைத் தோரையும் எங்கள் மண்ணுக்கு அழைத்து மதிப்பளிப் பதும், ஈழத்துக்கு வந்த பின்னர் தமது தனிப்பட்ட நலன் களுக்காக அந்தப் பிரபலங்கள் உரைக்கும் பசப்பு வார்த்தைகளும், இது இளைஞர்களைத் திசைதிருப்பும் ஓர் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிநிரலோ என்ற எண்ணத்தை மக்களிடையே விதைத்துள்ளது.

இருப்பழிந்து போய்க்கொண்டிருக்கும் ஈழத்தமி ழர்களது பண்பாட்டுத் தொடர்ச்சியை மீள நிலை நிறுத்துவதில் கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் பெரும் பங்கிருக்கிறது. அத்தகையதோர் சூழலில் துறைசார் ஆற்றலாளர்கள் தம்மைத்தாமே நிலை நிறுத்துவதற்குரிய களங்களற்று இருக்கையில், மக்கள் திரட்சியை அதிகரிப்பதற்காக எங்கள் மண்ணின் ஆலயங்கள், அமைப்புகள் என்பவற்றில் பெரும்பா லானவை தென்னிந்தியக் கலைஞர்களுக்கும், மக் களிடையே பரிச்சயம் மிக்க பிரபலங்களுக்கும் முக்கி யத்துவம் வழங்குகின்ற நிலை மாற்றம்பெற்று, அந் தந்த மண்ணின் கலைஞர்களுக்கும், இளைஞர்களுக் கும் அவர்களது கலைத்திறனுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் - என்றார். (ம-113)

# பேருந்து விபத்து மூவருக்குக் காயம்

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் அரச பேருந்தும், கூலர் வாகனமும் நேற்றுக்காலை விபத்துக்குள்ளாகி யதில் மூவர் காயமடைந்துள்ளனர். யாழில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த கூலர் ரக வாகனத்துடன், பின்னால் வந்து கொண்டிருந்த இலங்கைப் போக்கு வரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்துத் தொடர் பில் ஓமந்தைப் பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர். (ம-110)

# கடும் மழை காரணமாக 195 பேருக்குப் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 20

தற்போதைய சீரற்ற காலநிலை காரண மாக பருத்தித்துறைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ள நிலை யில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 195 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-125)

நாளை 21.11.2023 செவ்வாய்க்கிழமை கார்த்திகை 05

சுபநேரம் : 10.40 - 12.10

ராகுகாலம் : 03.10 - 04.40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்தன. அவற்றில் பாடசாலைகள் ரீதியாக அனுப்பப்பட்ட பெறுபெறுகளின் விவரம்:-

**மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்**
ஜெ.டேனுசன் - 181, ம.நிதுஜன் - 170, சு.துவேனுசன் - 169, ஜ.கேஷவ் - 159

**போக்கட்டி அ.த.க. பாடசாலை**
ம.வர்சிகன் - 159

**இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை**
ரி.தனுரன் - 174, பி பபிசன் - 163, எஸ். யஸ்வின் - 162, எம்.யிரோஷ் - 153, பி. கேசவி -153, எஸ். டினுசிகா - 151, என். மதுஸ்ரா- 150

**கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்**
சு.அபிஷா - 176, க.நிவின்சன் - 160

**கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை**
க.டனுஸ்ஹா - 169, வ.ஆதுர்ஜன் - 161, ந.துபிசாந் - 154, சு.சுவேனிகா 151, க.கிவிசனா - 147

**கச்சாய் மகா வித்தியாலயம்**
ந.கவீர்னா - 177, வி.இமானன் 163, சி.தனுஸ்கா -160, சி.கனிஸ்ரன்- 156, ச.கஸ்மிக்கா - 153, த.டனுஸ்கா - 152, பு.வேணுஜா- 149, சி.ஜெனித்தா - 147, அ.விதுர்சிகா - 147, கே கஜதீபன் - 146

# கல்வியியற் கல்லூரி முத்தமிழ் விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா இன்று திங்கட்கிழமை இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. காலை 8.30 மணிக்கு கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அரங்கில் முதல் அமர்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசன், இலங்கை வங்கி சிரேஸ்ட முகாமையாளர் எ.சந்தனு ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அரங்கில் இரண்டாம் அமர்வில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் பிரதம விருந்தினராக தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழியியற்றுறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ரகுபரன், சிறப்பு விருந்தினர்களாக பொது மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி சி.சிவன்சுதன், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரன் நரேந்திரா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

# 171 மாணவர்கள் தென்மராட்சியில் சித்தி

கொடிகாமம், நவ.20

2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 54 ஆரம்பப் பிரிவு பாடசாலைகளில் 966 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 825 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று தென்மராட்சி கல்வி வலயம் 85.40 சித்தி வீதத்தைப் பெற்றுள்ளது. வெட்டுப் புள்ளிக்கு மேல் 171 மாணவர்களும் 100 - 144 புள்ளிகளுக்கு இடையில் 403 மாணவர்களும் 70- 99 புள்ளிகளுக்கு இடையில் 251 மாணவர்களும் சித்திபெற்றுள்ளனர். (ரி-159,9)

# கோண்டாவில் பரஞ்சோதி புலமைப்பரிசிலில் சாதனை



யாழ்ப்பாணம், நவ.20

2023ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவி ஜஸ்ரின் ஜனனி 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

23 ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறை மாணவியொருவர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இந்தப் பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 4 மாணவர்களில் மேலும் ஒருவர் 144 புள்ளிகளைப் பெற்றதோடு ஏனைய இருவர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ச-27)

# வடிகால் இல்லாமையால் வீடுகளுக்குள் வெள்ளநீர்

## டச்சு- மீசாலை வீதி மக்கள் விசனம்

சாவகச்சேரி, நவ.20

சாவகச்சேரி-டச்சுவீதிதொடக்கம்மீசாலை வடக்கு வரையான வீதியில் வடிகால் அமைக்கப்படாமையால் வெள்ளநீர் அருகிலுள்ள காணிகளுக்குள் தேக்கமடைந்து நோய்ப்பரவல் ஏற்படுகிறது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

சாவகச்சேரி டச்சு வீதி தொடக்கம் மீசாலை வடக்கு வரையான வீதி தார்க்கலவை போடப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்போது வடிகால் அமைக்கப்படவில்லை. இதனால் மழைநீர் வடிந்தோடாது அருகிலுள்ள காணிகளுக்குள் தேக்கமடைகிறது.

இந்த வெள்ளநீரால் டெங்கு நுளம்புப் பரவல் உள்ளிட்ட நோய்த்தாக்கங்கள் ஏற்படுகின்றன.

எனவே குறித்த வீதியில் வடிகால் அமைத்து இருபுறத்திலுள்ள வெள்ள நீரை ஒழுங்குமுறையில் வெளியேற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்கவேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். அவசரப்பட்டு அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடவேண்டாம்.

**இடபம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**துலாம்:** கணவன் -மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம் :** ஒரேநாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்கவேண்டி வரும். எதிர்பாராத அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** ஆன்மீகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காகச் சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. நெடு நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் நெளிவுசுழிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

# தென்னை முக்கோண வலயம் வடக்கில் அங்குரார்ப்பணம்

## இயக்கச்சியில் முதற்கட்டம்

கிளிநொச்சி, நவ.20

வடக்கு மாகாணத்தில் தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு பளை மாதிரி தென்னந்தோட்டப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்தத் திட்டத்தினூடாக வடமாகாணத்தில் ஒரு இலட்சம் தென்னங்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன. இதற்காக 40 ஏக்கர் காணி வடக்கில் இனங்காணப்பட்டுள்ளன. அதன் முதற்கட்ட மாகவே இயக்கச்சி பகுதியில் 25 ஆயிரம் தென்னங்கன்றுகள் நடுகை செய்யும் செயற்றிட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது 150 பயனாளிகளுக்குத் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர் மாதவி ஹேரத், ஹோகாப் பில்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜித்த காரியவசன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் துளிகள்

மலர்வு 27 • 03 • 1939



உதிர்வு 17 • 11 • 2023

எமது ஆலய நெடுங்கால தொண்டரும் சப்பறத்திருவிழா உபயகாரருமான

## சின்னத்தம்பி முருகையா

மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும் - நினைவுகள்
எங்கள் இதயத்தில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை
பாசமான நினைவுகளை எம்மிடம் விட்டு சென்றீர் ஐயாவே...!!
உங்கள் ஆத்மா இறையின் பாதங்களில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவால் துயருறும்.
ஆலய ஆதீன கர்த்தாவும் புனருத்தாரண சபையும்
கீரிமலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.


## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை ஒப்பந்தகாரர்களையும், வழங்குநர்களையும் பதிவு செய்தல் - 2024

சபையானது 2024 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**1. பொருட்கள்**

01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. கட்டடப் பொருட்கள்
05. கற்கள், மணல், கிரவல்
06. தீந்தைவகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருட்கள்
07. நீர் வழங்கும் குழாய்கள், கியூம்பைப்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
08. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
09. கனரக இயந்திர உதிரிப்பாகங்கள்
10. மின்வழங்கும் பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள்
11. எரிபொருட்கள் உராய்வு நீக்கிகள்
12. இரும்புப்பொருட்கள்
13. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
14. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
15. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
16. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
17. பாதணிகள், தோற்பொருட்கள்
18. இலத்திரனியல் பொருட்கள்
19. வாகன சுத்திகரிப்பு பொருட்கள்
20. இறப்பர் முத்திரை தயாரித்தல்

**2. சேவைகள்**

01. அச்சிடுதல்
02. வாகனங்கள் திருத்தல்
03. கனரக இயந்திரங்கள் திருத்துதல்
04 வாகனங்களுக்கான ரயர், ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
06. மீளமின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு (சாதாரண, மெக்கானிக்கல்)
09. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு (Service)

**3. ஒப்பந்தவேலைகள் (CIDA பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)**

01. கட்டட நிர்மாண வேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாண / திருத்த வேலைகள்

பதிவிற்காக ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை அலுவலக நாட்களில் மு.ப.9.00 - பி.ப. 3.00 மணிவரையும் பிரதேசசபை வெங்கலச் செட்டிகுளம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பகட்டணமாக ரூபா 1000.00 ம் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2024 எனக்குறிப்பிட்டுபதிவுத் தபால் மூலம் செயலாளர், வெங்கலசெட்டிகுளம் பிரதேசசபை, மன்னார் - மதவாச்சி வீதி, செட்டிகுளம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 18.12.2023 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

மேலதிக விபரங்களுக்கு 024-2260055 அல்லது 024-2260914 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர்,**
**பிரதேசசபை, வெங்கலச்செட்டிகுளம்,**
**20.11.2023**

# அரசாங்கத்தின் நிதியொதுக்கீடு யானைப் பசிக்கு சோளப்பொரி

## மார்க்சிச லெனினிசக் கட்சி காட்டம்

யாழ்ப்பாணம், நவ.20

பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்குண்டுள்ள நாட்டு மக்களை ஏமாற்றும் வகையில் கிள்ளித் தெளிக்கப்பட்ட புதிய பாதீட்டு அறிக்கையே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணயநிதியத்தைத்திருப்திப்படுத்துவதற்காகவே இந்தப் புதிய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் புதிய மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்தில்வேல் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ஆட்சி முதல் இன்றுவரை மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். மூன்று வேளை உணவு உட்கொண்டவர்கள் தற்போது இரண்டு வேளையாக மாற்றியுள்ளனர். இந்த நிலைமைக்கான தீர்வுக்கு வழியேற்படுத்தப் படவில்லை.

எந்தவிதத் திட்டமிடலும் இல்லாது மக்களை ஏமாற்றும் வகையில் அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட்டை அரசாங்கம் சமர்ப்பித்திருக்கிறது.

மக்கள் நலன்சார்ந்ததாக இல்லாது மாறாக தனியார் நிறுவனங்களை வளைத்துப் போடுவதற்கும் ஊக்குவிக்கவும் - சர்வதேச நாணயநிதியத்தைத் திருப்திப்படுத் தும் வகையிலேயே இந்தப் பட்ஜெட் அமைந்துள்ளது.

மக்கள் இதற்கெதிராக வீதிகளில் இறங்கிப் போராடவேண்டும். ரணில் - ராஜபக்ச அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும்- என்றார்.

(ச-125)


**கடை விற்பனைக்கு**

வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடை.யொன்று விற்பனைக்குண்டு.

**077 138 0670**

**வீடு, காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை நகரத்தில்,
சிவன்கோயிலுக்கு அருகில்,
செட்டித்தெருவில் 4 பரப்பும் 2.88 குழியும்
உடைய வீடுடன் கூடிய காணி
விற்பனைக்குண்டு.
கிணறு பங்குடன்கூடியது.

**077 617 6623**


## மாந்தை கிழக்கு பிரதேச சபை 2024 ஆண்டுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல்

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பொன்னகர், பாண்டியன்குளம், பாலிநகர், நட்டாங்கண்டல் சந்தைகள் அடுத்த வருடம் 01.01.2024 முதல் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு குத்தகை வழங்குவதற்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் | :- 21.11.2023 – 04.12.2023 வரை (அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 3.30 மணி வரை) |
| கேள்விப்பத்தரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | :- 05.12.2023 மதியம் 12.00 மணிவரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | :- 05.12.2023 பி.ப 1.00 |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம் |

கேள்விப்பத்திரங்களை மாந்தை கிழக்கு பிரதேச சபையில் பெற்றுக்கொள்ள முடியும். பெறப்படும் கேள்விப்பத்திரங் களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியினை செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் என முகவரியிட்டு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும். இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகைக்கான சந்தைகள் | சந்தை வகை | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை | மீளளிக்க முடியாத வைப்புத்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | பாண்டியன்குளம் | மரக்கறிச் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 02 | பாண்டியன்குளம் | மீன் சந்தை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 03 | பாண்டியன்குளம் | கோழி இறைச்சிக் கடை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 04 | நட்டாங்கண்டல் | மரக்கறிச் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 05 | நட்டாங்கண்டல் | மீன் சந்தை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 06 | நட்டாங்கண்டல் | கோழி இறைச்சிக் கடை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 07 | பொன்னகர் | மரக்கறிச் சந்தை | 3000.00 | 1500.00 | 1000.00 |
| 08 | பொன்னகர் | மீன் சந்தை | 3000.00 | 1500.00 | 1000.00 |
| 09 | பொன்னகர் | கோழி இறைச்சிக் கடை | 3000.00 | 1500.00 | 1000.00 |
| 10 | பாலிநகர் | மரக்கறிச் சந்தை | 17100.00 | 1500.00 | 1000.00 |
| 11 | பாலிநகர் | மீன் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 12 | பாலிநகர் | கோழி இறைச்சிக் கடை | 6000.00 | 1500.00 | 1000.00 |
| 13 | கொல்லவிளாங்குளம் | வாராந்த சந்தை (மரக்கறிச்சந்தை) | 2000.00 | 1500.00 | 1000.00 |
| 14 | கொல்லவிளாங்குளம் | வாராந்த சந்தை (கோழி இறைச்சிக்கடை) | 6000.00 | 1500.00 | 1000.00 |

### நியந்தனைகள்

- இலங்கைப் பிரஜையாகவும், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றத்தினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்வி கோர தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
- ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- வியாபார உத்தரவுக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
- சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
- சித்தியடையும் கேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**[illegible]**
**செயலாளர்,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை.**

(Cr.41040) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சருக்கு எதிராக ஆளுங்கட்சி வியூகம்?

கொழும்பு, நவ. 20

ஜனாதிபதி மற்றும் ஆளுங்கட்சியினருடன் வெளிப்படையாகவே அரசியல் சமரில் ஈடுபட்டுவரும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின், அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிப்பது தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் திட்டம் தீட்டி வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 21ஆம் திகதி 2ஆம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன்பின்னர் 23ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் அதாவது பாதீட்டில் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவாதம் நடைபெறும். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்புக் கோரினால் அது நடத்தப்படும். இந்தநிலையிலேயே விளையாட்டுத்துறை அமைச்சு மீதான விவாதத்தின்போது வாக்கெடுப்புக் கோருவதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இலங்கைக் கிரிக்கெட்சபைக்கும், அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கும் இடையில் மோதல் மூண்டுள்ளது. இதற்கிடையில் ஜனாதிபதி மற்றும் ஆளுங்கட்சியினரும் அமைச்சருடன் முட்டி மோதி வருகின்றனர். பதவி விலகுமாறு ஆளுங்கட்சியினர் விடுத்த கோரிக்கையை அமைச்சர் நிராகரித்துள்ளார். தேவையெனில் ஜனாதிபதி தன்னை பதவி நீக்கட்டும் எனவும் தெரிவித்துள்ளார். இந்த நிலையிலேயே இவ்வாறு வாக்கெடுப்புக் கோரி விளையாட்டுத்துறைக்கு மட்டுமான ஒதுக்கீட்டை முடக்க ஆளும் கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

அதேவேளை, ஆளுங்கட்சியினர் வாக்கெடுப்பைக்கோரினால், அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

(ம-44)

# சுனாமி தற்காப்பு ஒத்திகை மன்னாரில் விழிப்புணர்வு!

மன்னார், நவ. 20

திடீரென ஏற்படும் சுனாமிப் பேரழிவிலிருந்து எவ்வாறு தப்பித்துக்கொள்வது என்ற முன்னேற்பாட்டு விழிப்புணர்வு நடவடிக்கைச் செயற்றிட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் தாழ்வுபாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

மன்னார் பிரதேச செயலகமும், மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் என்பன ஒருங்கிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

நிகழ்வில் சுனாமி எச்சரிக்கைத் தகவலானது மன்னார் வலயக் கல்வி அலுவலர் மூலம் பாடசாலை அதிபருக்குக் கிடைக்கப்பெற்றவுடன் அதிபரால் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு உடனடியாக அபாய ஒலி எழுப்பப்பட்டு சில நிமிடங்களுக்குள் மாணவர்கள் ஒன்றாக்கப்பட்டு முதலுதவிகளுக்காக வருகை தந்த படையினரின் வாகனங்களிலும் மருத்துவத் துறையினரின் அம்புலன்ஸ் வண்டிகளிலும் விரைவாக பாதுகாப்பான இடங்கள் நோக்கி வெளியேற்றப்பட்டு ஒத்திகை நடத்தப்பட்டது.

நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப், இடர் முகாமைத்துவ அதிகாரி கனகரெத்தினம் திலீபன் மற்றும் மன்னார் வலயக் கல்வி அலுவலர், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், முப்படையினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், சென்.ஜோசப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ச-213)

# சுகாதார அமைச்சின் செயலாளராக மஹிபால

கொழும்பு, நவ.20

சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பாலித மஹிபால நியமிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவ நிபுணரான மருத்துவர் மஹிபால 2019 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கான உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதியாக நியமனம் பெறுவதற்கு முன்பு சுகாதாரச் செயலாளராகவும் பிரதிப் பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் பொதுச் சுகாதாரம், சுகாதாரத் துறை முகாமைத் துவம், வணிக நிர்வாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகளில் தகுதி பெற்றவராவார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இலங்கையின் முதுகலை மருத்துவ நிறுவனத்தில் விரிவுரையாளர் மற்றும் பரீட்சை ஆணையாளராக இருந்துள்ளார்.

(எ-இ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
13 • 08 • 1942

உதிர்வு
21 • 10 • 2023

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்
வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட

### சிவகுமாரன் சீதாதேவி

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
அகலவில்லை எங்கள் துயரம் தாயே!
மனம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய் அனைவருடனும்
கலகலப்பாகப்பேசி மகிழ்விக்கும்
உங்கள் சிரித்தமுகம் கண்களில் தொடர்ச்சியாகத்
தோன்றிய வண்ணம் இருக்கின்றது
இவ்வளவு விரைவாக எங்களை விட்டுப்பிரிவீர்கள் என்று
கணப்பொழுதுகூட நாங்கள் நினைக்கவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

30, உப்புமாவடி, துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

குடும்பத்தினர்
077 950 1120



## மரண அறிவித்தல்



மண்ணில்
18 - 10 - 1928

விண்ணில்
17 - 11 - 2023

### வீரகத்திப்பிள்ளை குட்டியம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை குட்டியம்மா கடந்த (17.11.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி வீரகத்திப்பிள்ளை அவர்களின் மனைவியும் பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர் தாதியக்கல்லூரி), தங்கம்மா, பத்மராணி (UK) புஸ்பதேவி (ஜேர்மனி), அன்னலக்சுமி (Canada), Dr. மனோகரன் (Australia) தர்சினி (சாவகச்சேரி), புவனராணி (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவீந்திரன் (UK), காலஞ்சென்ற இரமணானந்தன் (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (Canada), சார்மிளா (Australia), இராகுலன் (சாவகச்சேரி), கபிலன் (UK) ஆகியோரின் மாமியாரும், சுகன்யா, கிறஃபி, தினேஷ்குமார், தாரணி, திவ்யா, கௌசிகன், சாளினி, அர்விந்த், தான்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அகில், மீரா, ஹைசன், ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/11 பெருங்குளம்,
சாங்காத்தானை வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 747 1050


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வலிகாமம் மேற்கு பிரதேசசபையால் கடந்த வியாழக்கிழமை அராலி மத்தி குமுக்கன் வாய்க்கால் தூர்வாரப்பட்டது. அடை மழை காரணமாக குடிமனைகளுக்குள் தேங்கி நிற்கும் வெள்ளநீர் வடிந்தோடமுடியாது காணப்பட்டதால் இந்த வாய்க்கால் தூர்வாரப்பட்டது. (ரி-27)



# முதியோர் தின நிகழ்வும் சாதனையாளர் மதிப்பளிப்பும்

யாழ்ப்பாணம், நவ.20

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய புலம்பெயர் மைந்தர்களின் அனுசரணையில் முதியோர் தின நிகழ்வும் சாதனையாளர் கௌரவிப்பும் அண்மையில் காந்திஜி சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெற்றது. காந்திஜி சனசமூக நிலையத் தலைவர் கே.ரமணதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்றார். (ச)



வவுனியா தெற்கு வலய நகரம் 1 முன்பள்ளிகளின் ஒருங்கிணைவுடன் கலை நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.மனோகரன், அயல் பாடசாலை அதிபர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர். (ரி-75)






கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன. கண்டாவளைப் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலாளர் க.சத்தியஜீவிதா, சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். மாற்றுத்திறனாளிகளிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ரி- 113)





சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் மேற்படி ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ். சைவபரிபாலனசபையின் செயலாளரும், ஆசிரியருமான இரா.செல்வவடிவேல் கலந்து கொண்டு மகாபாரதத் தொடர் சொற்பொழிவின் ஒரு பகுதியை ஆற்றினார். (ரி-66)



வலி. வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
18.12.1924

மறைவு
19.11.2023

## சிவக்கொழுந்து சிவஞானம் (இராசமணி)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், மாவிட்டபுரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சிவஞானம் (இராசமணி) அவர்கள் நேற்று (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் பாசமிகு மனைவியும், தம்பையா அன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், குமாரசாமி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசோதி, காலஞ்சென்ற சிவகாமி, சிவப்பிரகாசம், சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவதர்மர், சிவானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பவளம், நடராசா ஆகியோரின் மைத்துனியும், விசியலட்சுமி (கனடா), சேனாதிராசா, ஈஸ்வரி (கனடா), பாக்கியலட்சுமி (இந்திரா), முத்துக்குமாரசாமி (சந்திரா-கனடா), திருச்செல்வம் (உருத்திரா-பிரான்ஸ்), தயாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கணேசதுரை, கண்மணி, காலஞ்சென்ற பத்மநாதன், காலஞ்சென்ற இராஜகுலேந்திரன், காலஞ்சென்ற இந்திராணி (சாந்தி), உதயராணி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸ்ரீவாணி (கனடா), கலாவதி (லண்டன்), செல்வச்சந்திரன், நமணிதரன் (ஜேர்மனி), கீதவாணி (லண்டன்), கௌரி (கனடா), சபேசன் (நிறைவேற்று அதிகாரி C.G.I), சுதாகர் (கனடா), நகுலேந்திரன் (ஜேர்மனி), விமலேந்திரன் (பிரான்ஸ்), கஜேந்திரன் (ஜேர்மனி), மங்களேஸ்வரன் (கனடா), பவானி (கனடா), மிதுலா (லண்டன்), கமலினி (கனடா), தர்சினி, சுகந்தி (கனடா), சுபாசினி (கனடா), நவியா, நரேஸ் (கனடா), சஞ்சீவன், ஜேவிந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீகரன், சசிகரன், சியானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும், கொள்ளுப் பேரப்பிள்ளைகளின் கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாயுடை,
மாவிட்டபுரம்.

(CS 27035) (S-1)

தகவல்:
குடும்பத்தினர்
077 881 2934

## வேலைவாய்ப்பு

முகாமையாளர், சாரதி, கிளாக், Cook, Maintenance, உதவியாளர்

0740833368, 0777733368

# மரண அறிவித்தல்



**திருமதி செல்லத்துரை புவனேஸ்வரி (குழந்தை அக்கா)**

யாழ். ஆவரங்கால் சங்கணாவத்தையை பிறப்பிடமாகவும், வசாவிளானை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி செல்லத்துரை புவனேஸ்வரி (குழந்தை அக்கா) அவர்கள் கடந்த (17.11.2023) வெள்ளிக்கிழமை இறைபாதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற திருமதி நாகம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, பாலசரஸ்வதி, சுந்தரேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீரஞ்சினி (பேபி) லண்டன், சகுந்தலாதேவி (ரதி-சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (ஈசன்- கனடா), நந்தினி (லண்டன்), நிதினி (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், தெய்வேந்திரம்பிள்ளை, காலஞ்சென்ற வரதராசா, சித்திரா, காந்தரூபன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்சிகன், சிந்துஜன், பாரதி, ராம்ஜி, சரண்ஜி, நிவேதா, விதுஷன், யாதவி, மனுஷா, நிருஜன், நிருஜா, கஜானா, விகிர்தன் ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2023) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
வேவி (மகள்) 0044 7424510857
ஈசன் (மகன்) 001 416 786 5053
ரதி (மகள்) 0041 779728875
நந்தினி (மகள்) 004407783 768322
நிதினி (மகள்) 00 41 76 475 08 74

(CR 41064)A-1

## றொஷானின் பதவி திஸாநாயக்கவுக்கு?

கொழும்பு, நவ.20

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க விளையாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராகச் செயற்படும் றொஷான் ரணசிங்கவிடமிருந்து விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி பெறப்படவுள்ளது. பாதீட்டு கூட்டத்தொடரின் பின்னர் ஜனவரி முற்பகுதி அளவில் இந்த மாற்றம் இடம்பெறும் என்றும் அந்தப் பதவிக்கே எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய இரு அமைச்சுப் பதவிகளிலும் றொஷான் ரணசிங்க தொடர்வார்.

அதேவேளை, எஸ்.பி. திஸாநாயக்க விளையாட்டுத் துறை அமைச்சுப் பதவியை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச–44)

## Vacancies

Telephone operator, Content writer, Account Manager, Marketing, Clerk, Receptionist, Office admin, IT admin.

0760984532/0741383368

## வேலையாட்கள் தேவை


யாழ். நகரில் இயங்கும் தனியார் அதிசொகுசு பேரூந்து சேவை மற்றும் பொதிகள் சேவை நிறுவனத்தின் யாழ். அலுவலகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- * எழுதுநர்
- * ஆசன பதிவாளர் (AC பஸ்)
- * அலுவலக உதவியாளர்

தொடர்புகளுக்கு: 0777 114 226

# மரண அறிவித்தல்

பிறப்பு
24
07
1955



இறப்பு
19
11
2023

**சுப்பிரமணியம் பிறேமராஜன்**

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பிறேமராஜன் நேற்று (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், ராகினியின் அன்புக் கணவரும், கஜமுகன் (ஆசிரியர் மாத்தளை) அவர்களின் அன்புத் தந்தையும், நிலுஷாவின் (ஆசிரியை-மாத்தளை) மாமனாரும், விஜாஷின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வர்களான சுகுணராஜன், உஷாயினி மற்றும் ஜோகராஜன், சந்திரராஜன், ரஞ்சினி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6917 481

(CS 27037)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை முக்கோண வலயம் வடக்கு மக்களுக்கு பசியாற்றும்

## வடக்கு மாகாண ஆளுநர்



**யாழ்ப்பாணம், நவ. 20**

**வடக்கின் தென்னை முக்கோண வலயம் வடக்கு மாகாணத்தில் நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி எழுந்து நிற்பதற்கு வழிவகுக்கும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

நாட்டின் இரண்டாவது தென்னை முக்கோண வலயமான கிளிநொச்சி, இயக்கச்சிப் பகுதியில் தென்னம்பிள்ளைகளை நடும் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.
இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-
நாட்டின் இரண்டாவது தென்னை முக்கோண வலயம் கடந்த செப்ரெம்பர் மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.
யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களுடன், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கி வடக்கு தென்னை முக்கோண வலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
அந்தவகையில் இந்தச் செயற்றிட்டம் சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் 3 மாதங்களுக்குள் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் தென்னம் பிள்ளைகளை நடுகை செய்யும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
வடக்கில் மீள்குடியேற்றத்தின் பின்னர் வழங்கப்பட்ட தென்னம் பிள்ளைகள் இன்று மக்களின் வாழ்வாதாரமாக மாறியுள்ளன. இந்தத் திட்டத்தினூடாக இலவசமாக வழங்கப்படும் தென்னங்கன்றுகள் வடமாகாணத்தில் நலிவுற்றிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்.
அதேவேளை, நட்புசார் விவசாயத்தை விஸ்தரிக்கும் நோக்கில் எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய கையடக்கத் தொலைபேசி செயலி ஒன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-100)

# முண்டமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்

*யாழ்ப்பாணம், நவ. 20*

*பொன்னாலைச்சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் தலையில்லாத நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.*
*ஆனைக்கோட்டை - ஆறுகால்மடத்தைச் சேர்ந்த கந்தசாமி சேகரன் என்பவரின் சடலமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளது. (அ-ஒ-125)*

# கோப்பாய் கலாசாலையில் நூற்றாண்டுகால சிறப்புரை

யாழ்ப்பாணம், நவ.20

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டுகால சிறப்புரை அரங்க நிகழ்வு அதிபர் ச.லலீசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் அதிதிப் பேச்சாளராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன் கலந்து சிறப்பித்தார்.
அதிதி பேச்சாளருக்கான அறிமுக உரை யை கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரை யாளர் க.அன்பரசி ஆற்றினார். அதிதிப் பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (ம)

---

## அரிசி...

இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான வரி அதிகரிக்கப்பட்டது. வரி உயர்வால், பல வியாபாரிகள் விலையை உயர்த்தியதால், அதைக் கட்டுப்படுத்த அதிகபட்ச சில்லறை விலையை அரசு விதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனி 275 ரூபாவாகவும், ஒரு கிலோ பிறவுண் சீனி 330 ரூபா என அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டது.
இந்த நிலையில், சந்தையில் சீனி கையிருப்பு விற்பனைக்கு வரவில்லை என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.
மேலும், சந்தையில் சம்பா, கீரிச்சம்பா அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
ஆயினும், நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் சீனி மற்றும் அரிசி விற்பனை செய்பவர்களைக் கண்டறியும் சோதனைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## பட்ஜெட்...

கட்டாயம் சபைக்கு வருகை தருமாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, ஆளுங்கட்சி பிரதம கொறடா அலுவலகம் ஊடாக அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-44)

## இந்தியாவின்...

யடுத்து அன்றிரவே பத்திரமாக விடுவிக்கப்பட்டனர்.
2 படகுகளுடன் 22 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்கிடையில் கைதான இராமேஸ்வரம் மீனவர்களை விடுவிக்குமாறு, இராமேஸ்வரத்துக்குச் சென்றிருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம், அங்குள்ள மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்தன.
உடனடியாக அவர் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு மீனவர்களை விடுவிக்குமாறு பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தையடுத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் அவர்கள் இந்தியக் கடலோர காவல் படையிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-125-27-100)

## சீனிக்குத்...

சீனித் தட்டுப்பாடு அல்லது தேவையற்ற விலை அதிகரிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வலியுறுத்தியுள்ளார்.
சீனியை சரியான விலையில் கொள்வனவு செய்து தேவையற்ற தட்டுப்பாடு ஏற்படாமல் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமல்ல, பொதுமக்களினதும் பொறுப்பு என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## வழிப்பறிக்கு...

ஏமாற்றத்துடன் தப்பியோடியுள்ளனர்.
ஆலயத்திலிருந்து சுழிபுரம் ஐக்கிய சங்கம் வீதியில் வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில், மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்தவாறு வந்த இருவர் கைவைத்துள்ளனர்.
பெண் கழுத்தில் எதுவித நகையும் அணிந்திராத நிலையில் அவரை அடித்து விட்டு முகமூடிக் கொள்ளையர்கள் தப்பித்துள்ளனர். (அ-ஒ-125)

## சிறையில்...



கோட்டை பொலிஸாருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
பண்ணாகத்திலுள்ள வீடொன்றில் பதினாறு அரைப் பவுண் நகை மற்றும் 10 ஆயிரம் ரூபா பணம் களவு போனதாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த 11 ஆம் திகதி கலைவாணி வீதி சித்தன்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்சன் (வயது - 25) எனும் இளைஞனை வட்டுக்கோட்டை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
12 ஆம் திகதி தெல்லிப்பழை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தியபோது, கையில் ஏற்பட்ட தாக்குதல் அடையாளம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்குமாறு தெல்லிப்பழை சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.
நீதிமன்றினூடாக சிறைச்சாலையில் சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதன்பின்னர் சிறைச்சாலை உத்தியோகத்தரின் பாதுகாப்பின் கீழ் 12ஆம் திகதி மாலை முதல் 16ஆம் திகதிவரை யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.
இந்த நிலையில் "நேற்றையதினம் அவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு சுயநினைவற்ற நிலையில் பி.ப. 1.32 மணியளவில் சேர்க்கப்பட்டு, சில நிமிடங்களில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்" என்று போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டபோது கடமையிலிருந்த அதிகாரி, கடந்த 11ஆம் திகதி சந்தேகநபர் கைது செய்யப்பட்டு 12ஆம் திகதி சட்டமருத்துவ அதிகாரி ஊடாக நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டார் எனவும் மேலதிக தகவல்களை பொலிஸ் ஊடக பேச்சாளரிடம் பெற்றுகொள்ளுமாறும் தெரிவித்தார்.
உயிரிழந்தவரின் உறவினர்களால், வட்டுக்கோட்டை பொலிஸார் அவரை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். அத்துடன் 'எனது முகத்தை பொலித்தீன் பையால் 3,4 மணித்தியாலங்கள் மூடிக் கட்டிவிட்டு,பொலிஸார் தாக்கினர்' என உயிரிழந்தநபரின் காணொலி வாக்கு மூலம் ஒன்றும் தம்மிடம் இருப்பதாக உறவினர்கள் தெரிவித்தனர்.
இதேவேளை - உயிரிழந்தவரின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை இன்றே வெளியாகும். அதன் பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும். (அ-ஒ-26-27-125)

## சிறையில் இளைஞன்...

சிறைச்சாலையில் உயிரிழந்த இளைஞன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக உறவினர்களால் குற்றம்சுமத்தப்படும் நிலையில் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார். (அ-ஒ-26-27-125)

## தள்ளியதில்...

வாய்பேச முடியாத ஒருவருக்கும், பிறேமராசனுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதன்போது பிறேமராசனை தள்ளி வீழ்த்தியதாகவும் காயமடைந்த அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்போது உயிரிழந்தார் என்றும் கோப்பாய் பொலிஸார் கூறுகின்றனர். சந்தேகநபர் கைதாகியுள்ளார். (அ-ஒ-26-27-125)

## அமெரிக்காவும்...

வித்துள்ளது. இதேவேளை - அவுஸ்திரேலிய எரிபொருள் விற்பனை நிறுவனமான யுனைட்டெட் பெற்றோலியம் உரிய வைப்புத்தொகையை வைப்புச் செய்து விட்டதாகவும் ஆனால் எப்போது சேவையை ஆரம்பிக்கப்போகிறது என்பது தெரியவில்லையெனவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் வவுனியா வீதி!



வவுனியா, நவ.20

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழையால் வவுனியா- மன்னார் மற்றும் வவுனியா- திருகோணமலை பிரதான வீதிகள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. இதனால் இந்தப் பாதையூடாக போக்குவரத்துச் செய்யும் பாதசாரிகள் கடும் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

வவுனியா நகரில் காணப்படுகின்ற வடிகால்கள் தூர்வாரப்படாமையால் வெள்ளம் வடிந்தோட முடியாது தேங்கியுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-75)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 48 பரப்புக்காணி (நிலப்பரப்பு) விற்பனைக்குண்டு.**

* கைதடி சந்தியிலிருந்து 250 m தூரத்தில்
* வங்கிகள், தபால் நிலையம் 200 m தூரம்
* A-09 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
* நன்னீர் ஊற்று நிலம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* சித்த போதனா வைத்தியசாலை நேர் எதிராக அமைந்துள்ளது.
* வீடுகள் கட்டுவதற்கும், மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி.
* வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
* சித்த மருத்துவ பீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்

**பார்வையிடும் நேரம்:** காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**
**076 213 7239**

(CS 26998) K-1



## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
02 . 09 . 1938



மறைவு
21 . 10 . 2023

**அமரர் கணபதிப்பிள்ளை இராசரத்தினம்**
**(PM வரணி)**

அவர்களினது அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (19.11.2023) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத் தியக்கிரிகைள் இன்று (20.11.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எங்கள் குடும்ப விளக்கு அணைகின்ற வேளை அருகில் நின்று ஆறுதல் தந்தவர்கள், அயலவர்கள், உறவினர்கள், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டும் வலைத்தளங்களில் அனுதாபங்களைப் பதி விட்டும் தொலைபேசியினூடாக ஆறுதல் அளித்த அன்புள்ளங்களுக்கும் இறுதிக்கிரியைகளை நிகழ்த்தி உதவிய உறவுகளுக்கும், குருக்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் பொருத்தமான உதவிகளை செய்து தந்த அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளை பதிவு செய்கின்றோம்.

கரம்பைக்குறிச்சி கிழக்கு,
வரணி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் முருகேசு சின்னத்தம்பி**

திதி : கார்த்திகை பூர்வ பக்க அட்டமி
(20.11.2023)

மண்ணில்
20.02.1945

விண்ணில்
11.12.2021

முருகேசுவின் முத்தாய் பிறந்து கடைச்சின்னத்தம்பி
என்று பெயருடனும் புகழுடனும் வாழ்ந்த
எங்கள் அப்பாவே!
பெருமையுள்ள பெருமக்களைப் பெற்று - நுணாவில்
நன்மகனாய் வாழ்ந்து எங்களை
ஒவ்வொரு நாளும் கரிசனையுடன்
எங்களைப் பெரிதாக வளர்த்த எங்கள் தாத்தாவே
பௌவ்வியமாய் நீங்கள் வழிகாட்டும்
ஒளியாய் எம்வாழ்வில் மிளிர்ந்தீர்
உங்கள் வழிகாட்டும் ஒளியிங்கு
ஈராண்டு எங்குபோனது
எங்களின் வழிகாட்டும் விழிகள் போகும்
வழி தெரியாமல் ஏங்குது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

(CS 52877)(K-1)

குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.